JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **240/2009** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **PW6** | Prosecution /Defence / Court | |
| Name | **Muthusamy** | Caste | |
| Father's Name | **Chinnasamy** | Calling | |
| Village | **Periyapuliampalayam** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the dayof

01.12.2020

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி விலாசத்தில் குடியிருந்துகொண்டு விவசாயம் செய்துவருகிறேன். கடந்த 17.11.2008 ஆம் தேதி மாலை 6.00 மணியளவில் பெருந்துறை விஜயமங்கலத்தில் உள்ள எனது உறவினர் வீட்டில் திருட்டு நடந்தது சம்மந்தமாக போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது நானும் என்னுடன் செல்வம் என்பவரும் இருந்தார். அப்பொழுது காவல் துறையினர் எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். மேற்படி பார்வை மகஜர் **அ.த.சா.ஆ.2** ஆகும். பின்னர் மேற்படி மகஜரில் என்னிடமும் செல்வத்திடமும் கையெழுத்து பெற்றார்கள். பின்னர் இரவு 8.30 மணியளவில் சம்பவ இடத்தில் கிடந்த தாழ்ப்பாளை எங்களது முன்னிலையில் கைப்பற்றினார்கள். மேற்படி தாழ்ப்பாள் **சா.பொ.8** ஆகும். மேற்படி கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.3** ஆகும். கைப்பற்றுதல் மகஜரில் நானும் செல்வமும் கையெழுத்து செய்தோம். இது சம்மந்தமாக

போலீசார் என்னை விசாரித்தனர். நகை 12 -1/2 பவுன் நகையும் ரூ.3000/- ரூபாயும் திருடு போனதாக கேள்விப்பட்டேன்.

குறுக்கு விசாரணைக்கு அனுமதி அளிக்கப்பட்டும் எதிரியிடம் தெரிவிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2020.

Signature of Interpreter